DINAMALAR 14 FEB 2010





கோவை அருகே வெள்ளிங்கிரி மலை அடிவாரத்தில் அமைந்துள்ள ஈஷா யோகா மையத்தில் நேற்று முன்தினம் இரவு நடந்த மகா சிவராத்திரி விழாவில் அதன் நிறுவனர் ஜக்கி வாசுதேவ் ஆடினார். **அடுத்த படம்:** கிராமிய நடனமும் நடந்தது.

# சிவராத்திரியில் ஏன் விழித்திருக்க வேண்டும்?

## ஜக்கி வாசுதேவ் விளக்கம்

**பேரூர், பிப். 14 -**

'ஒவ்வொரு மனிதரும் தனது உள்ளத்தை ஒருமுகப்படுத்திக் கொள்ள தியானங்கள் அவசியமாகிறது,' என ஜக்கிவாசுதேவ் பேசினார்.

பூண்டி ஈஷாயோகா மையத்தில் சிவராத்திரி விழா நேற்று முன் தினம் மாலை தியானலிங்க குருபூஜையுடன் துவங்கியது.

இதில், ஈஷா யோகா மைய நிறுவனர் ஜக்கிவாசுதேவ் பேசியதாவது:

சிவனின் அருளைக் கொண்டாடும் சிவராத்திரி விழாவில், எப்போதும ஆதி குருவாகவும், யோகாவின் முதல் குருவாகவும் கருதப்படுகிற சிவனின் அருளைப் போற்றும் விதமாகவும் இந்த இரவு கொண்டாடப்படுகிறது.

இந்த இரவு முழுவதும் முதுகுத்தண்டை நேர்நிலையில் வைத்து விழித்திருப்பவர்களுக்கு உடல்நிலையிலும் மற்றும் ஆன்மீக நிலையிலும் அதிக பலன்கள் கிடைக்கின்றன. இந்த நாளில் செய்யப்படும் ஆன்மீக பயிற்சிகளுக்கான பலன்கள் பலமடங்கில் கிடைக்கின்றன.

இந்த காரணங்களால் தான் இந்த இரவில் தூங்காது விழித்திருக்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது. ஆன்மீக பயிற்சிகள் ஏதும் அறியாதவர்க்கும் கூட இந்த இரவு தன் சக்தி நிலையை மேல்நோக்கி செலுத்த ஒரு வாய்ப்பாக இருக்கிறது.

சிவனை சுயம்பு என்கிறோம். அவனுக்கு குறிப்பிட்ட காலமும், மூலமும் இல்லாமல் சுயம்பாக திகழ்கிறான். படைத்தல், காத்தல் என இரு தொழிலையும் செய்வது சிவன் தான். நம்முள் இருக்கும் கடந்த காலம், குறுகிய எண்ணங்கள் ஆகியவற்றை அழிப்பது 'சிவா' என்ற சொல்லின் அதிர்வுதான்.

இன்றைய சமுதாயத்தில் மனிதர்களிடையே கோபம், மன அழுத்தம், வன்முறை, தீவிரவாதம், குற்றங்கள் என அதிகரித்துக்கொண்டே போகிறது. ஒவ்வொருவரும் தங்களை உணராததே இதற்கு முக்கிய காரணமாகும். இதனால் உடல் ரீதியான, மன ரீதியான பிரச்னைகள் ஏற்படுகிறது. இப்பிரச்னைகளிலிருந்து விடுபட ஒவ்வொருவரும் தங்களது உள்ளத்தை ஒருமுகப்படுத்த கற்றுக்கொள்ள வேண்டும். அதற்கு இது போன்ற தியானங்கள் மிக அவசியம்.

இவ்வாறு, ஜக்கி வாசுதேவ் பேசினார்.

தொடர்ந்து இரவு முழுவதும் பல்வேறு இசை, நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடந்தன. இடையிடையே ஜக்கி வாசுதேவ் நடனமாடி, விழாவில் பங்கேற்றவர்களை உற்சாகப்படுத்தினார்.

வெளிநாடுகள், வெளிமாநிலங்கள் மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து பல்லாயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.